**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATழUR.**

**C.C. No.40/2024.**

1. Deposition of Witness for : PW5 (Additional witness)
2. Name : பாலாஜி
3. Father's Name : பலராமன்
4. Village : வாணியம்பாடி
5. Taluk : திருப்பத்தூர்
6. Calling : ஆட்டோ ஓட்டுநர்
7. Age : 34

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 10.09.2025.

எதிரி ஆஜர்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 11.11 A.M,

விசாரணை முடிக்கப்பட்டநேரம் –11.32 A.M

<u>முதல் விசாரணை</u>:–

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். கடந்த 2023 –ம் வருடத்தில் மேட்டுப்பாளையத்தில் உள்ள ஜே.பி அகர்பர்த்தி கம்பெனியில் பர்த்தி தயாரிக்கும் மெஷினில் மெக்கானிக்காக வேலை செய்து வந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் மேற்படி நான் வேலை பார்த்த கம்பெனியின் உரிமையாளர். மோகன்ராஜ் அந்த கம்பெனியில் வேலை பார்த்து இறந்த விவரம் உங்களுக்கு தெரியுமா

என்றால் அந்த சம்பவத்தின்போது அந்த நிறுவனத்தில் வேலை செய்யவில்லை. உங்களுக்கு மோகன்ராஜ் இறந்த விவரம் எப்படி தெரியும் என்றால் ஊரில் உள்ளவர்கள் சொல்லி தெரியும். நான் வேலை பார்த்த கம்பெனி என்பதால் கம்பெனிக்கு சென்று விபத்து நடந்த அன்று பார்த்தேன். நான் பார்க்கும்போது அங்கு ஜனங்கள் இருந்தார்கள். அவர் இறப்பை குறித்து ஒவ்வொரு நபர்கள் ஒவ்வொரு விதமாக சொன்னார்கள். நான் கம்பெனிக்கு சென்று பார்க்கும்போது மோகன்ராஜ் அந்த இடத்தில் இல்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.4–ல் பாலாஜி என்று போடப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய கையெழுத்தை பெண்மணி ஒருவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க போட்டேன். நிர்மல்ராஜ் என்னுடன் வேலை பார்த்தவர் போடசொன்னதன் அடிப்படையில் போட்டேன்.

( சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அரசு தரப்பில் அறிவிக்ககோரி பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u> :–

சம்பவத்திற்கு 2 வருடங்களுக்கு முன்பு இருந்தே நீங்கள் ஜே.பி அகர்பர்த்தி நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தீர்கள் என்றால் சரிதான். 01.09.2023 அன்று அந்த பையனுக்கு அடிபட்டு இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. 01.09.2023 அன்று நீங்களும் விபத்தில் பாதிக்கப்பட்ட மோகனும் 8 பெண்களுடன் காலை 09.00 மணிக்கு மேற்படி அகர்பர்த்தி கம்பெனிக்கு வேலைக்கு சென்றோமா என்றால் விபத்திற்கு 2 மாதங்கள் முன்பே நான் வேலையை விட்டு சென்றுவிட்டேன். அன்றைய தினம்

காலை 11.30 மணியளவில் மரத்தூள் மற்றும் கரித்தூள் கலக்கும் மிஷின் அறையிலிருந்து சத்தம் கேட்டு நீங்கள் பார்த்ததாகவும் மோகன்ராஜ் மேற்படி மெஷினில் கை மாட்டி அது சுழன்று தலை மாட்டி அடிப்பட்டு மயங்கி கிடந்ததாக தொழிலக ஆய்வாளர் வந்து விசாரித்தபோது நீங்கள் சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தொழிலக ஆய்வாளர் விசாரணையின்போது நீங்கள் கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் நான் கையொப்பம் செய்தது எழுதப்படாத வெள்ளை தாளில். ஆஜர் எதிரி நீங்கள் வேலை பார்த்த நிறுவனத்தின் உரிமையாளர் மற்றும் உங்களுக்கு நண்பர் என்ற வகையில் நாளது தேதிவரை அவருடன் உங்களுக்கு பழக்கமா என்றால் எனக்கு உரிமையாளர் என்ற வகையில் அவரை எனக்கு பழக்கம். நீங்கள் சம்பவத்தின்போது ஆஜர் எதிரிக்கு உரிமையான நிறுவனத்தில் வேலை பார்த்து மோகன்ராஜ் இறந்த சம்பவம் உங்களுக்கு தெரியும் எனவும் தற்போது ஆஜர் எதியை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :– இல்லை.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur

Chief Judicial Magistrate,
Tirupathur.